சுருக்கம்

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை – காஞ்சிபுரம் அத்திவரதர் எழுந்தருளிய வைபவம் – 01.07.2019 முதல் 17.08.2019 வரை பொது சுகாதார பணிகள் மேற்கொண்டதற்கான செலவினம் சிறப்பு நிதி ஒதுக்கீடு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ப்பி2) துறை

அரசாணை(நிலை) எண்.42

நாள்.05.02.2020
விகாரி, தை–22,
திருவள்ளுவர் ஆண்டு 2051.

படிக்க:

பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர், சென்னை, ந.க.எண்.64493/நலவியல்/ இரு.2/2019, நாள் 03.10.2019.

*****

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் அத்திவரதர் எழுந்தருளிய வைபவம் 01.07.2019 முதல் 17.08.2019 வரை 48 நாட்கள் நடைபெற்றதை முன்னிட்டு பெருந்திரளான மக்கள் காஞ்சிபுரத்தில் தரிசனம் செய்ய திரண்டதையடுத்து பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறையால் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்றும், மேலும் அத்திவரதர் எழுந்தருளிய வைபவம் அறிவிக்கப்பட்ட திருவிழாவாக இல்லாத காரணத்தால் இவ்வைபவத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட பொது சுகாதாரப் பணிகளுக்கான செலவினம் அத்துறையால் அவசரம் கருதி மாவட்ட நலவாழ்வுக் குழும நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது என்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. அத்திவரதர் வைபவத்தை முன்னிட்டு காஞ்சிபுரத்தில் 01.07.2019 முதல் 17.08.2019 வரை செய்யார், திருவண்ணாமலை, வேலூர், திருவள்ளூர், ஒசூர், கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் பூந்தமல்லி ஆகிய சுகாதார மாவட்டங்களிலிருந்து மருத்துவர்கள், அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்கள் மாற்றுப்பணியில் நியமனம் செய்யப்பட்டு சிறப்பு மருத்துவ முகாம்கள், கொசு ஒழிப்பு நடவடிக்கைகள், குளோரினேஷன் மற்றும் புகையடிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. காஞ்சிபுரத்தில் அத்திவரதர் வைபவத்தை முன்னிட்டு 01.07.2019 முதல் 17.08.2019 வரை மேற்கொள்ளப்பட்ட பொது சுகாதார பணிகளுக்கான செலவினங்கள் குறித்த விவரத்தினை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

| வ. எண் | பொருள் | காஞ்சிபுரம் சுகாதார மாவட்டம் ரூ. | செங்கல்பட்டு சுகாதார மாவட்டம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | மருத்துவ முகாம் ஏற்பாடுகள் | 4,81,020/– | ----- | 4,81,020/– |
| 2. | வாகன எரிபொருள் மற்றும் புகைஅடிக்கும் பணி | 1,00,000/– | 1,50,000/– | 2,50,000/– |
| 3. | மருத்துவ உபகரணங்கள் மற்றும் பொருட்கள் | 2,50,000/– | ----- | 2,50,000/– |
| 4. | விழிப்புணர்வு, தகவல் நல கல்வி தொடர்பு (IEC) மற்றும் எதிர்பாராத செலவினம் | 3,50,000/– | 1,82,800/– | 5,32,800/– |
| 5. | புத்துணர்ச்சியாக்கம் செலவினம் | 7,75,200/– | 1,57,200/– | 9,32,400/– |
| 6. | கிருமிநாசினியாக்கம் | 3,03,780/– | 2,50,000/– | 5,53,780/– |
| 7. | தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட மருந்துகள் | 10,50,000/– | ----- | 10,50,000/– |
| | மொத்தம் | 33,10,000/– | 7,40,000/– | 40,50,000/– |

4. எனவே, அத்திவரதர் எழுந்தருளிய வைபவத்தை முன்னிட்டு பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறையால் மாவட்ட நலவாழ்வுக் குழும நிதியிலிருந்து காஞ்சிபுரத்தில் பொது சுகாதார பணிகளுக்கென மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினத் தொகை ரூ.40,50,000/– (ரூபாய் நாற்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஈடுசெய்யும் பொருட்டு சிறப்பு நிதி ஒதுக்கீடாக வழங்குமாறு பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேலே, பத்தி 5–ல் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமாக பரிசிலிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, அத்திவரதர் எழுந்தருளிய வைபவத்தை முன்னிட்டு பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறையால் மாவட்ட நல வாழ்வுக் குழும நிதியிலிருந்து காஞ்சிபுரத்தில் பொது சுகாதார பணிகளுக்கென மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினத் தொகை ரூ.40,50,000/–யை (ரூபாய் நாற்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஈடுசெய்யும் பொருட்டு கீழ்க்கண்டவாறு சிறப்பு நிதி ஒதுக்கீடாக பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இயக்குநருக்கு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | இனம் | காஞ்சிபுரம் சுகாதார மாவட்டம் | செங்கல்பட்டு சுகாதார மாவட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | 305–02 ஏனைய சில்லரை செலவுகள் | 4,81,020 | --- | 4,81,020 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | 345–01 பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் | 1,00,000 | 1,50,000 | 2,50,000 |
| 3. | 319–01 இயந்திரமும் சாதனமும் வாங்குதல் | 2,50,000 | --- | 2,50,000 |
| 4. | 308–01 விளம்பரக் கட்டணங்கள் | 3,50,000 | 1,82,800 | 5,32,800 |
| 5. | 372–01 பயிற்சி | 7,75,200 | 1,57,200 | 9,32,400 |
| 6. | 366–01 மருந்துகள் | 13,53,780 | 2,50,000 | 16,03,780 |
| | | 33,10,000 | 7,40,000 | 40,50,000 |

6. மேலே பத்தி 5–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2210 மருத்துவமும் பொது சுகாதாரமும் 06 பொது சுகாதாரம் 101 நோய்களைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும் மாநிலச் செலவினங்கள் AB கொள்ளை நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகள்" .

| வ. எண் | பொருள் கணக்குத் தலைப்பு | காஞ்சிபுரம் சுகாதார மாவட்டம் ரூ. | செங்கல்பட்டு சுகாதார மாவட்டம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 305 - அலுவலக செலவுகள்<br>02 – ஏனைய சில்லரை செலவுகள்<br>(Old DPC 2210-06-101-AB-0528) (IFHRMS DPC 2210-06-101-AB-30502) | 4,81,020/– | - | 4,81,020/– |
| 2 | 345 – பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய்<br>01 – பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் மசகெண்ணெய்<br>(Old DPC 2210-06-101-AB-4506-POL)<br>(IFHRMS DPC 2210-06-101-AB-34501) | 1,00,000/– | 1,50,000/– | 2,50,000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 319 – இயந்திரமும் சாதனமும்<br>01 – வாங்குதல்<br>(Old DPC 2210-06-101-AB-1910-M&E)<br>(IFHRMS DPC 2210-06-101-AB-31901) | 2,50,000/– | – | 2,50,000/– |
| 4 | 308 – விளம்பரமும் பிரச்சாரமும்<br>01 – விளம்பரக் கட்டணங்கள்<br>(Old DPC 2210-06-101-AB-0813-AD)<br>(IFHRMS DPC 2210-06-101-AB-30801) | 3,50,000/– | 1,82,800/– | 5,32,800/– |
| 5 | 372 – பயிற்சி<br>01 – பயிற்சி<br>(IFHRMS DPC 2210-06-101-AB-37201) | 7,75,200/– | 1,57,200/– | 9,32,400/– |
| 6 | 366 – மருந்துகள்<br>01 – மருந்துகள்<br>(Old DPC 2210-06-101-AB-6602-MED)<br>(IFHRMS DPC 2210-06-101-AB-36601) | 3,03,780/– | 2,50,000/– | 5,53,780/– |
| 7 | 366 – மருந்துகள்<br>01 – மருந்துகள்<br>(Old DPC 2210-06-101-AB-6602-MED)<br>(IFHRMS DPC 2210-06-101-AB-36601) | 10,50,000/– | ---- | 10,50,000/– |
| | மொத்தம் | 33,10,000/– | 7,40,000/– | 40,50,000/– |

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2019–2020ஆம் நிதியாண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2019–2020ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் மேலே பத்தி 5–ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2019–2020 ஆம் நிதியாண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளில் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (சுகாதாரம்–1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வானை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 1849/நிதி (சுகாதாரம்–I) துறை, நாள்.29.01.2020 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டு பேரேடு எண். 2958 (இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து எட்டு)–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர், சென்னை – 600 006.
மாநில கணக்காயர், சென்னை– 600 018
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்(தெற்கு), சென்னை–35.
<u>நகல்</u>
முதுநிலை உதவியாளர், மாண்புமிகு அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம்) அலுவலகம், சென்னை– 600 009.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
நிதி (சுகாதாரம்–I, BG- II) துறை, சென்னை – 600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (Data Cell) துறை, சென்னை – 600 009.
உதிரி கோப்பு / இருப்பு கோப்பு

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர் 6/2/2020
6/2/2020